# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032

தொலைபேசி 044-22201337

மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in

இணையதளமுகவரி: www.tnlbo.tn.gov.in


முன்னிலை: திரு.மகேசன் காசிராஜன் இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

<u>ஆணை எண். 173/மா/2024,</u>
<u>நாள் 25. 02.2025</u>

திருவாளர்கள் D. பழனி மற்றும்
கோ. கோவிந்தராஜ், சென்னை .......... முறையீட்டு மனுதாரர்கள்

1) மண்டல அலுவர்,
மண்டலம் 10,
பெரு நகர சென்னை மாநகராட்சி,

2) டாக்டர். சீனிவாசன்,
மேற்கு மாம்பலம், சென்னை.

3) திரு.எம். குணசேகரன்,
மேற்கு மாம்பலம், சென்னை.

........... எதிர் மனுதாரர்கள்

சென்னை, மேற்கு மாம்பலம், ஆண்டியப்பன் தெரு, கதவு எண்.15 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. D. பழனி மற்றும் சென்னை அசோக் நகர், 15வது தெரு, கதவு எண். 22/43 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.கோ. கோவிந்தராஜ் என்பவர்களின் 27.08.2024 மற்றும் 11.09..2024 நாளிட்ட மனுக்கள் இம்முறைமன்ற நடுவத்தில் 27.8.2024 மற்றும் 11.09.2024 ஆகிய தேதிகளில் பெறப்பட்டு, 173/மா/2024, என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரர்களின் முறையீட்டு மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது

## ஆணை

சென்னை, மேற்கு மாம்பலம், ஆண்டியப்பன் தெரு கதவு எண்.15 என்கிற முகவரியில் வசிக்கும் திரு D. பழனி மற்றும் சென்னை அசோக் நகர் 15வது தெரு, கதவு எண். 22/43 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.கோ. கோவிந்தராஜ் ஆகியோர் 27.08.2024 மற்றும் 11.09.2024 நாளிட்ட தங்களது மனுக்களில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளனர்.

“தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய வீடுகளில் சுமார் 75 ஆண்டுகளுக்கும் மேலாக தலைமுறை, தலைமுறையாக ஏராளமான குடும்பங்கள் வசித்து வருகிறோம். எங்கள் வீட்டிலிருந்து சுமார் 20 மீட்டர் தொலைவில் சென்னை–33, கோவிந்தன் சாலை உள்ளது. அங்கு நாங்கள் வழிபடும் கெங்கை அம்மன் கோவில் உள்ளது. கோவிலுக்கு முன்புறம் 75 ஆண்டுகள் பழமையான ராட்சத ஆலமரம் இருந்தது. அதையொட்டி கதவு எண்.8, கோவிந்தன் ரோடு, மேற்கு மாம்பலம், சென்னை – 600 033 முகவரியில் நான்கு தளம் கொண்ட வணிக வளாக கட்டிடம் கட்டப்பட்டது. இக்கட்டிட உரிமையாளர் Dr.சீனிவாசன் கடந்த ஆண்டு கோவிலில் வழிபட்டிருந்த எங்களை அழைத்து என் கட்டிடம் முன்பு இம்மரம் இடையூறாக உள்ளது. இதை அகற்றிவிடுங்கள், இல்லையென்றால், நான் அகற்ற நேரிடும் என்று தொடர்ந்து கூறி வந்தார். வெயில் காலங்களில் ஊர் மக்கள் நிழலுக்காக இங்கு வந்து அமர்வோம். மேலும், அதிக மூலிகை சக்தி கொண்ட இந்த ஆலமரம் இங்கு வசிப்பவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது. மேலும் ஏராளமான காக்கா, குருவிகள், குரங்குகள் மற்றும் பறவைகள் இம்மரத்தில் ஓய்வெடுத்திருந்தன``.

மேற்படி மத்திய, மாநில அரசு மற்றும் பசுமை தீர்ப்பாயம் புதிதாக மரங்களை நட வலியுறுத்தி வருகிறது என்று தெரிவித்து மரத்தை அகற்ற மறுத்து வந்தோம். கடந்த 03.12.2023 அன்று இரவு சுமார் 12.00 மணியவில் பல நாட்களாக தொடர்ந்து பெய்த காற்று மழையால் சுமார் மூன்று அடி உயரத்தில் வெள்ளம் சூழ்ந்த வேளையில் மின்சார இணைப்பு துண்டிக்கப்பட்டது. இதை பயன்படுத்தி கட்டிட உரிமையாளர் Dr.சீனிவாசன் JCB இயந்திரத்தால் ஆட்களை வைத்து மரத்தை கீழே சாய்த்தார். சாய்த்த சத்தம் கேட்டு ஊர் மக்கள் சாலையில் வந்து பார்த்தபோது Dr.சீனிவாசன் தலைமையில் மரத்தை கீழே தள்ளி அகற்றி கொண்டிருந்தார்கள். அதிக மழை வெள்ளம் சாலையில் சென்றதால் அங்கு செல்லமுடியவில்லை. 06.12.2023 மாநகராட்சி அதிகாரிகள் நன்றாக பச்சை பசேலென்னு உயிருடன் இருந்த மரத்தை அகற்ற முயற்சி செய்தபோது ஊர் மக்கள் ஒன்று கூடி மீண்டும் அதே இடத்தில் மரத்தை சீர் செய்து புதைக்கும்படி சென்னை மாநகராட்சி அதிகாரிகளை வலியுறுத்தி திரு.கோ.கோவிந்தராஜ் மூலம் ஊர் மக்கள் கையொப்பமிட்டு மாநகராட்சி அதிகாரிகளுக்கு ஒப்புகையுடன் அளித்த புகார் அளித்தோம். சென்னை மாநகராட்சி அதிகாரிகள் எதிர்மனுதாரரிடம் கையூட்டு பெற்றுக் கொண்டு மரத்தை அப்புறப்படுத்தும் நோக்கத்தில் செயல்பட்டு மரத்தை அகற்றினார்கள். மீண்டும் அங்கு மரம் வைத்து கொள்ள மாநகராட்சி ஊர் மக்களிடம் ஒப்புதல் தெரிவித்ததால் அவர்கள் முன்னிலையில் 06.12.2023 அன்றே மரகன்றுகள், நடப்பட்டன.

தற்பொழுது 15 அடி உயரம் வரை மரங்கள் செழுமையாக வளர்ந்து வந்த நிலையில் கடந்த 18.08.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று மதியம் சுமார் இரண்டு மணியளவில் சென்னை மாநகராட்சி மண்டலம் 10 திரு. இனியன் AEE தலைமையில், மாநகராட்சி ஊழியர்கள் சம்பவ இடத்திற்கு வந்து மரத்தை அப்புறபடுத்த முயற்சித்தார்கள். இதை கண்ட ஊர் மக்களாகிய நாங்கள் சென்று கேட்கையில் சுத்தம் செய்து வேலி அமைப்பதாக தெரிவித்து வேலி அமைத்து சென்றார். மீண்டும் 19.08.2024 அன்று நள்ளிரவு சுமார் 1.50 மணியளவில் திரு. இனியன் AEE தலைமையில் JCB இயந்திரத்தால் மரத்தை வேரோடு அகற்றினார்கள். மரம் அகற்றப்பட்டதை கண்டு ஊர் மக்களாகிய நாங்கள் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளானோம். மரம் அகற்றப்பட்ட இடத்தில் கட்டிட உரிமையாளர் தற்பொழுது வாகனங்களை நிறுத்தி இருப்பதை இம்மனுவுடன் இணைத்து அனுப்பப் பட்ட புகைப்படத்தில் காணலாம்.

ஆகவே, சட்ட விதிமுறைகளை மீறி மரத்தை அகற்றியவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுத்து, மீண்டும் அங்கு மரம் நட உத்தரவிட கோரி ஊர் மக்கள், தொடர் கையொப்பமிட்டு இம்மனு அளிக்கப்படுகிறது. மேலும் அங்கு மரம் அமைத்த பிறகு நிரந்தரமாக மரம் இருக்க சமூக

விரோதிகளிடமிருந்து மரத்தை காக்க பதிவுத்துறை அதிகாரிகள் மரத்தை பதிவு செய்ய உத்தரவு அளிக்க வேண்டுகிறோம்.

2. மேற்கண்ட முறையீட்டு மனுக்கள் மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 01.10.2024 நாளிட்ட அறிவிக்கை மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலர் தனது 24.10.2024 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கடந்த 2023 வடகிழக்கு பருவ மழையின் போது புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள கோவிந்தன் சாலையில் இருந்த பழமையான ஆலமரம் வேர்கள் பலமிழந்து (கரையானால் அரிக்கப்பட்டு) 03.12.2023 அன்று இரவு வேரோடு சாய்ந்து விட்டது. மேற்படி கோவிந்தன் சாலை என்பது பேருந்து செல்லும் சாலை என்பதால், மரத்தின் கிளைகள் போக்குவரத்துக்கு இடையூறாக இருந்த காரணத்தால், பெருநகர சென்னை மாநகராட்சி, பூங்கா பணியாளர்கள் மூலம் வெட்டி அகற்றப்பட்டு, போக்குவரத்து சரி செய்யப்பட்டது. மேலும், திரு.D.பழனி மற்றும் திரு.கோ.கோவிந்தராஜ் அவர்கள் வேரோடு சாய்ந்த அந்த ஆலமரத்தை மீண்டும் நடவு செய்துதர வேண்டும் என்று மனு கொடுத்தார்கள்.

மேற்படி புகாரின் பேரில் விழுந்த அந்த மரத்தை நடைபாதையில் நடவு செய்ய இயலாது என்றும், வேர்கள் கரையானால் அரிக்கப்பட்டதால் மீண்டும் நட முடியாது என்றும் திரு.D. பழனி மற்றும் திரு.கோ.கோவிந்தராஜ் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. மேலும் விழுந்த மரத்தை பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் 10.12.2023 அன்று அகற்றப்பட்டது.

மேலும் புகார் மனுதாரர் முரண்பாடாக மரம் விழுந்த இடத்திற்கு அருகில் ஒரு ஆலமர கன்றாவது நடவு செய்தே ஆக வேண்டும் என்று, ஒரு ஆல மரக்கன்றை பெருநகர சென்னை மாநகராட்சி அனுமதியின்றி நடவு செய்தனர். நாளடைவில் அந்த மரத்தை சுற்றிலும் தேவையில்லாத சில மரக்கன்றுகளை நடவு செய்து நடைபாதையை மீண்டும் ஆக்கிரமிப்பு செய்து, பொது மக்கள் மற்றும் நடைபாதைவாசிகள் நடைபாதையை பயன்படுத்தாவண்ணம் சுகாதார சீர்கேடுகளுடன் கூடிய இடமாக மாற்றப்பட்டுள்ளது.

கடந்த 12.08.2024 அன்று அருகிலுள்ள அந்த கட்டடத்தின் மேலாளர் திரு.குணசேகரன் என்பவர், தனது மேற்பார்வையில் உள்ள கட்டடத்தில் Apex Medical Centre என்ற மருத்துவமனை இயங்கி வருவதாகவும், மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளுக்கு மேற்படி ஆக்கிரமிப்புடன் கூடிய நடவு செய்த மரக்கன்றுகளால் மருத்துவமனைக்கு செல்வதற்கு சிரமமாக இருப்பதாகவும், மருத்துவமனை வாகன நிறுத்தத்தில் தங்களது வாகனங்களை நிறுத்த முடியாமல் சாலையில் நிறுத்தப்படுவதால் போக்குவரத்து இடையூறு ஏற்படுவதாகவும் புகார் மனு அளித்துள்ளார்.

மேற்படி புகார் மனுவின் மீது நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு மரக்கன்றுகளுடன் கூடிய நடைபாதை ஆக்கிரமிப்பை முற்றிலுமாக அகற்ற முடிவு செய்து சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏதும் ஏற்படாவண்ணம் 19.08.2024 அன்று அதிகாலை சுமார் 2 மணியளவில் பெருநகர சென்னை மாநகராட்சி உதவி ஆணையர்/மாவட்ட வருவாய் அலுவலர், மண்டலம்–10, மற்றும் காவல்துறை உதவி ஆணையர் அவர்கள் முன்னிலையில் காவல்துறை உதவியுடன் நடைபாதையில் இருந்த மரக்கன்றுகளை அகற்றி, கோடம்பாக்கம் சாலையில் உள்ள அம்மா பூங்காவில் நடவு செய்து

தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகின்றது என்பதை தங்களின் மேலான பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

மேலும், புகார் மனுதாரர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகள் மீது உண்மைக்கு புறம்பான புகார்களை அளித்துள்ளார்கள் என்பதை இதன் மூலம் தெரிவித்து கொள்ளப்படுகிறது என்று தெரிவித்துள்ளார்.

4. இம்மனுக்கள் தொடர்பாக மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை 03.01.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 27.12.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர்கள் 03.01.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்.

“மேற்கண்ட முகவரியில், தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய வீடுகளில் சுமார் 75 ஆண்டுகளுக்கு மேலாக வசித்து வருகிறோம். கோவிந்தன் சாலையில் நாங்கள் வழிபடும் கெங்கை அம்மன் கோவில் முன்புறம் பழமையான ராட்சத ஆலமரம் இருந்தது. அங்கு நான்கு தளம் கொண்ட வணிக வளாகம் கட்டப்பட்டது. அதன் உரிமையாளர் டாக்டர் சீனிவாசன் மேற்கண்ட ஆலமரம் கட்டிடத்திற்கு இடையூறாக உள்ளது என்றும் அதனை அகற்றுமாறும் இல்லையெனில் தான் அதனை அகற்றபோவதாக தெரிவித்தார். ஆனால் மத்திய, மாநில அரசு மற்றும் பசுமை தீர்ப்பாயம் புதிதாக மரங்களை நட வலியுறுத்துவதால் நாங்கள் ஆலமரத்தை அகற்ற மறுத்து விட்டோம். ஆனால் 03.12.2023 அன்று இரவு பெய்த மழையால் மின்சார இணைப்பு துண்டிக்கப்பட்டது. இதனை பயன்படுத்தி மேற்கண்ட கட்டிட உரிமையாளர் மரத்தை ஆட்கள் மூலம் கீழே சாய்த்தார். 06.12.2023 அன்று மாநகராட்சி அதிகாரிகள் உயிருடன் இருந்த மரத்தை அகற்ற முயற்சி செய்தபோது நாங்கள் அம்மரத்தை சீர்செய்து அங்கே புதைக்கும்படி கூறினோம். அப்போது ஒப்புக்கொண்ட அதிகாரிகள் பின்னர் எதிர்மனுதாராரிடம் கையூட்டு பெற்றுக்கொண்டு மேற்கண்ட மரத்தை அகற்றினார்கள். மாநகராட்சி அதிகாரிகளின் ஒப்புதல்பேரில் வேறு மரகன்றுகள் நடப்பட்டன.

ஆனால் 18.08.2024 அன்று மதியம் பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகள் நடப்பட்டு நன்றாக வளர்ந்த மரத்தை அப்புறப்படுத்த முயற்சித்தார்கள். ஆனால் எங்களுடைய முயற்சியால் அகற்றாமல் அதற்கு வேலி அமைத்து சென்றனர். மீண்டும் 19.08.2024 அன்று நள்ளிரவு பெரு நகர சென்னை மாநகராட்சி அதிகாரிகள் JCB இயந்திரத்தால் மரத்தை வேரோடு அகற்றிவிட்டனர்.

எனவே, சட்ட விதிமுறைகளை மீறி மரத்தை அகற்றியவர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்குமாறும், அகற்றிய மரத்தை மீண்டும் நட உத்திரவிட கோரியும் மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

6. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்10–ன் செயற்பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் ஆகியோர் 03.01.2025 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்.

''கடந்த 2023 ஆண்டு வடகிழக்கு பருவ மழையின் போது மனுதாரர் குறிப்பிட்டுள்ள ஆலமரம் வேர்கள் பலமிழந்து (கரையானால் அரிக்கப்பட்டு) 03.12.2023அன்று இரவு வேரோடு சாய்ந்துவிட்டது. மேற்படி கோவிந்தன் சாலை பேருந்து செல்லும் சாலை என்பதால் சாய்ந்த மரத்தின் கிளைகள் போக்குவரத்துக்கு இடையூறாக இருந்த காரணத்தினால் பெருநகர சென்னை மாநகராட்சி பூங்கா பணியாளர்கள் மூலம் வெட்டி அகற்றப்பட்டு போக்குவரத்து சரி செய்யப்பட்டது. மனுதாரர்கள் அந்த ஆலமரத்தை மீண்டும் நடவு செய்து தர வேண்டும் என்று மனு அளித்தார்கள். அதற்கு வேர்கள் கரையானால் அரிக்கப்பட்டதால், மீண்டும் நட இயலாது என்று மனுதாரர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. மேலும் விழுந்த மரத்தை பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் 10.12.2023 அன்று அகற்றப்பட்டது.

மனுதாரர்கள் மரம் விழுந்த இடத்தில் ஒரு ஆலமரகன்றாவது நடவு செய்தே ஆகவேண்டும் என்று, பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதியின்றி மாநகராட்சிக்கு உரித்தான இடத்தில் நடவு செய்தனர். மேலும், நாளடைவில் அம்மரத்தைச் சுற்றிலும் நடைபாதையை ஆக்கிரமித்து தேவையில்லாத வேறு சில மரகன்றுகளை நடவு செய்து நடைபாதையை பயன்படுத்தாவண்ணம் சுகாதார சீர்கேடுகளுடன் கூடிய இடமாக அந்த இடம் மாற்றப்பட்டது.

12.08.2024 அன்று அருகிலுள்ள கட்டடத்தின் மேலாளர், அக்கட்டிடத்தில் Apex Medical Centre என்ற மருத்துவமனை இயங்கி வருவதாகவும். மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளுக்கு மேற்படி ஆக்கிரமிப்புடன் கூடிய நடவு செய்த மரக்கன்றுகளால் மருத்துவமனையின் உள்ளே செல்வதற்கு சிரமமாக உள்ளதாகவும், வாகனங்களை நிறுத்துவதற்கு இயலாமல், சாலையின் நடுவே நிறுத்தப்படுவதால் போக்குவரத்து இடையூறு ஏற்படுவதாக புகார் மனு அளித்தார்.

மேற்கண்ட புகார் மனு மீது நடவடிக்கை எடுக்கும் பொருட்டு மரக்கன்றுகளுடன் கூடிய நடைபாதை ஆக்கிரமிப்பை முற்றிலுமாக அகற்ற முடிவு செய்து சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏதும் ஏற்படாவண்ணம் 19.08.2024 அன்று அதிகாலை பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் காவல்துறை உதவியுடன் நடைபாதையில் இருந்த மரக்கன்றுகளை அகற்றி, அகற்றப்பட்ட மரகன்றுகளை கோடம்பாக்கம் சாலையில் உள்ள அம்மா பூங்காவில் நடவு செய்து தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது என்று மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களுக்கு தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் மனுதாரர் திரு.கோவிந்தராஜ் அவர்கள் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் W.P.No.31985/2024 வழக்கு தொடர்ந்தார். அவ்வழக்கின் 07.11.2024 நாளிட்ட தீர்ப்பாணை பின்வருமாறு :-

"Counsel for Corporation states that the Superintending Engineer (Parks, Playfields and CRRT), in consultation with the appropriate authority shall within four weeks chalk out a plan how to plant trees in the lane concerned".

மேலும் உயர்நீதி மன்றம் உத்திரவின்படி 10 பெரிய மரக்கன்றுகள் மற்றும் 100 சிறிய மரக்கன்று எண்ணிக்கையில் மரம் விழுந்த இடத்தில் இருந்து 100 மீட்டர் தொலைவில் சாலையோர பூங்காவில் நடப்பட்டது. இத்தகவல் மனுதாரருக்கு அளிக்கப்பட்டு, மேலும் மூத்த சட்ட அலுவலர் சட்ட குழுமம் அவர்களுக்கு முடிவு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது என்பதனை பணிந்து சமர்ப்பிக்கின்றோம்.

மேலும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலரின் 24.10.2024 நாளிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ள விவரங்களை எங்களது மேல் வாக்குமூலமாக ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்"

7. மற்றொரு எதிர்மனுதாரரான Apex Medical Centre-ன் சார்பாக திருமதி A. சுகன்யா என்பவர் **03.01.2025** அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது எழுத்துப்பூர்வமான வாக்குமூலத்தை சமர்ப்பித்தார்.

This instant petition ought to be dismissed with cost as against the petitioner who has no locus to even file this instant petition. The Petitioner herein is known to be a delinquent person who has been heavily come down on by the Hon'ble Madras High Court. The Hon'ble Chief Justice of the Madras High Court in W.P.No.33774/2024 dated 05.12.2024 had passed the following order which is extracted herein for ready reference.

**"Petitioner appears to be a professional litigant, who thrives on making false statements on oath"**

(1) The same petitioner had filed a public interest litigation in W.P.No.31985 of 2024, against the same private respondent with regard to a banyan tree. The allegation was that the tree was pushed down using a JCB. That petition came to be disposed vide order dated 07.11.2024 W.P.No.31985 of 2024 was filed in September 2024. The date is not mentioned. In September, 2024, again without mentioning the date, the present public interest litigation has been filed by the same petitioner against the same private respondent.

(2) Very cleverly an averment is made, "I state that in this regard, I have not filed any public interest litigation as on today and this is the first public interest litigation".

(3) It will be useful to reproduce paragraph 10 of a judgment of the Bombay High Court in **Kundana Kumar Lal –vs- Capgemini India Pvt.Ltd and others.**

"10. In T.Arivandanam v.T.V.Satyapal. (1977) 4 SCC 467. the Apex Court observed as under:

"If on a meaningful not formal reading of the plaint it is manifestly vexatious and meritless in the sense of not disclosing a clear right to sue, it should exercise its power under Order VII Rule 1 1 CPC taking care to see that the ground mentioned therein is fulfilled if clever drafting has created the illusion of a cause of action, the Court must nip it in the bud at the first hearing by examining the party searchingly under Order X, CPC An activist judge is the answer to irresponsible law suits."

(4) **In September 2024, against the same private respondent, two public interest litigations have been filed. It is quite clear that petitioner is only targeting the private respondent and using the machinery of this Court for his personal agenda.**

**(5) Petition dismissed with costs. Petitioner shall pay a sum of Rs.1,00,000/- (Rupees One lakhs only) as cost.**

(6) At this stage, counsel for petitioner states that the cost may not be imposed and he has instructions to give an undertaking on behalf of petitioner that petitioner shall not file any public interest litigation against any party for the next two years.

(7) In view thereof we recall the order regarding imposition of cost. Undertaking accepted."

(a) It is submitted that this goes to show the history of the Petitioner herein whose sole intention as recorded by the Hon'ble Madras High Court is nothing but to harass private respondents for his ulterior motive. **This entire case ought to be dismissed with heavy cost as it is also as against the undertaking given before the Hon'ble Madras High Court by the petitioner.**

(b) Apart from the above preliminary objection. I further state that neither me nor the 1st or 2nd Respondent was involved in removing of the said tree. It is absolutely false to state that the same has been removed by the Respondent with the help of the department officer Mr.Iniyan AEE on 19.08.2024.

(c) The tree which is the subject matter had been uprooted as a result of the flood and cyclone amongst other such trees in the locally which were weaker in nature. It is never the intention of the Respondent herein to support deforestation and like. On the other hand, the Respondent herein itself is a environmental conservationist, and has done plenty of afforestation. Even at this very moment, the Respondent herein in order to make up for the loss of tree and also on his own count had planted saplings and in the process of doing more such saplings in flower pots. Therefore, in either terms, the grievance of the Petitioner it truly being addressed in letter and spirit.

(d) However, the sole intention of the Petitioner to plant a particular tree in the very same spot is without any reasoning and least to say is with an intention to harass the Respondent herein in his best way possible.

In light of the aforesaid submissions, it is prayed that this petition be dismissed with cost".

8. மற்றொரு எதிர் மனுதாரரான டாக்டர் சீனிவாசன் 03.01.2025 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகவில்லை. அன்னாருக்கு பதிவு தபாலில் அனுப்பப்பட்ட அழைப்பாணை "Unclaimed" என்று முத்திரையிட்டு திரும்ப வரபெற்றுள்ளது.

முறையீட்டு மனுதாரர்களின் புகார் மனுக்கள், வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலரின் அறிக்கை, செயற்பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளரின் வாக்குமூலம், மற்றும் எதிர்மனுதாரரான Apex Medical Centre சார்பாக திருமதி A. சுகன்யா ஆஜராகி அளித்த வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

மனுதாரர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10, கோவிந்தன் தெருவில் 75 ஆண்டுகளுக்கு மேலாக இருந்த பெரிய ஆலமரத்தை 03.12.2023 அன்று பெய்த மழையை பயன்படுத்தி, வணிக வளாக உரிமையாளர் டாக்டர் சீனிவாசன், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் அலுவலர்களுக்கு கையூட்டு கொடுத்து வெட்டி கீழே சாய்த்தனர். 06.12.2023

அன்று நாங்கள் ஒன்றுகூடி அந்த ஆலமரத்தை மீண்டும் அதே இடத்தில் அமைக்குமாறு கோரினோம். ஆனால் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் அந்த ஆலமரத்தை அகற்றினார்கள். பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் ஒப்புதல் அளித்ததால் அதே இடத்தில் மர கன்றுகள் எங்களால் நடப்பட்டன. ஆனால் நன்றாக வளர்ந்த மரத்தை 19.08.2024 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் வேரோடு அகற்றிவிட்டனர். எனவே அங்கு வேறு மரகன்றை நட பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களுக்கு உத்திரவிடுமாறும், தனிநபர்களுக்கு சாதகமாக ஆலமரத்தை அகற்றிய பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளனர்.

03.12.2023 அன்று பெய்த பெருமழையினால் மனுதாரர் குறிப்பிட்ட பலமிழந்த ஆலமரம் வேரோடு சாலையில் சாய்ந்து விட்டது. அதன் காரணமாக போக்குவரத்திற்கு இடையூறு ஏற்பட்டதால் அதன் கிளைகளை அகற்றி போக்குவரத்து சீர் செய்யப்பட்டு 10.12.2023 அன்று அம்மரம் அகற்றப்பட்டது. மனுதாரரால் மீண்டும் அதே ஆலமரத்தை நடவு செய்யுமாறு வற்புறுத்தப்பட்டது. ஆனால் வேர் கரையானால் அரிக்கப்பட்டதால் அதனை நடவு செய்ய இயலாது என்று தெரிவிக்கப்பட்டும், மனுதாரர்களால் மாநகராட்சியின் அனுமதியில்லாமல் வேறு சில மர கன்றுகள் நடைபாதையினை ஆக்கிரமித்து நடவு செய்யப்பட்டன. அருகிலுள்ள கட்டிடத்தில் இயங்கும் Apex Medical Centre மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளுக்கும், மருத்துவமனைக்கு வருவோர்களுக்கும் மிகவும் இடையூறாக இருப்பதாக புகார் அளிக்கப்பட்டதன் பேரில், அங்குள்ள மரக்கன்றுகள் அகற்றப்பட்டு, கோடம்பாக்கம் சாலையில் உள்ள அம்மா பூங்காவில் நடவு செய்து பராமரிக்கப்பட்டு வருவதும், மனுதாரர் இது குறித்து தொடர்ந்த வழக்கில் மரக்கன்றுகளை மாற்றி அமைக்க உரிய துறையுடன் கலந்து ஆலோசித்து நான்கு வாரத்தில் முடிவு செய்யப்படும் என்ற மாநகராட்சியின் வாதத்தை ஏற்று அவ்வழக்கினை முடித்து வைத்து சென்னை மாண்பமை உயர்நீதி மன்றம் உத்திரவிட்டதும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் உதவி ஆணையர்அறிக்கை, மற்றும் செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர், வாக்குமூலம் ஆகியவற்றின் மூலம் அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் ஒருவராகிய திரு.கோ. கோவிந்தராஜ் அவர்கள் மேற்கண்ட பொருள் குறித்து தாக்கல் செய்த வழக்கு எண். W.P.No.31985 of 2024ல் மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதி தன்னுடைய 07.11.2024 நாளிட்டு அளித்த தீர்ப்பு பின்வருமாறு :

"After the petition was heard for some time, counsel for petitioner states that the main purpose is to make the road look green.

2. Counsel for Corporation states that the Superintending Engineer (Parks, Playfields and CRRT), in consultation with the appropriate authority, shall within four weeks chalk out a plan how to plant trees in the lane concerned.

In view thereof, petition is disposed of. There shall be no order as to costs.

மேற்குறிப்பிட்ட வழக்கு மற்றும் அதன் தீர்ப்பு குறித்து இம்முறைமன்றத்திற்கு எதிர் மனுதாரரான Apex Medical Centreன் சார்பாக அளித்த வாக்குமூலத்தின் மூலம் அறிய முடிகிறது. மேற்கண்ட வழக்கு மற்றும் தீர்ப்புரை பற்றி மனுதாரர்கள் தங்களது புகாரிலோ அல்லது வாக்குமூலத்திலோ இம்முறைமன்றத்திற்கு தெரிவிக்க வேண்டும். ஆனால் மனுதாரர்கள் இவ்வழக்கு மற்றும் தீர்ப்பினை மறைத்து இம்முறைமன்றத்திற்கு புகார்அளித்ததோடு மட்டுமல்லாமல், தங்களது வாக்குமூலத்திலும் தெரிவிக்கவில்லை. இந்நேர்வில் புகார்

அளிக்கப்பட்டுள்ள பொருள் தொடர்பாக எற்கனவே மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு W.P No.31985 of 2024ல் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் 07.11.2024 நாளிட்டு தீர்ப்பு அளிக்கப்பட்டு தீர்ப்பின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்ட நிலையில் மனுதாரர்களின் 27.08.2024 மற்றும் 11.09.2024 நாளிட்ட முறையீட்டு மனுக்கள் மீது மேல் நடவடிக்கை எடுக்க அவசியம் எழவில்லை என்று இம்முறைமன்றம் முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

2025-ஆம் ஆண்டு பிப்ரவரி 25–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு.D. பழனி
கதவு எண்.15, ஆண்டியப்பன் தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை–33.

2) திரு. கோ. கோவிந்தராஜ்,
கதவு எண். 22/43,15வது தெரு,
அசோக் நகர்,
சென்னை–83.

3) ஆணையர்
பெருநகர சென்னை மாநகராட்சி
ரிப்பன் மாளிகை
சென்னை 600 003

3) மண்டல அலுவலர்,
மண்டலம் 10,
பெருநகர சென்னை மாநகராட்சி,
64, N S K சாலை,
கோடம்பாக்கம். சென்னை

4) Dr.சீனிவாசன்,
கதவு எண்.8, கோவிந்தன் ரோடு,
மேற்கு மாம்பலம்,
சென்னை–33.

5) திரு.குணசேகரன்,
மேலாளர்,
Apex Medical Centre,
8,ஆண்டியப்பன் தெரு
கோவிந்த தெரு, மேற்கு மாம்பலம்,
சென்னை–33.

6) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

7) இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்

இகோ/உதிரிகள்

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

சட்ட ஆலோசகர்/செயலாளர் (FAC).